உள்ளே செல்லமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்படிக் கட்டப்படுகின்ற கரையில் சலவையாளர்கள் ஆற்றிலே இறங்கி துணி துவைக்கின்ற அளவுக்கு படி வசதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அதிகாரிகளோடு கலந்துகொண்டு சாத்தியக்கூறுகள் அறிந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

Thiru T. Venkata Reddy: Hon'ble Deputy Speaker Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee :

(1) Fifty-fourty Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to Revenue Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts)

(2) fify-fifty Report of the Committee on Public Account on the paragraphs pertaining to Home Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83ஆம் மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) மின்னணுவியல், அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை.

சட்டமன்ற TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS